بسم الله الرحمن الرحيم

# FRIDAY SERMON

## வெள்ளிக்கிழமை குத்து:பா 28-03-2014

# FOR THE ATTENTION OF WORLD MUSLIMS

# உலக முஸ்லீம்களின் கவனத்திற்கு

## Hazrat Khalifathullah Munir Ahmad Azim (A)

தனது தோழர்களுக்கு சமாதான வாழ்த்துக்கள் கூறியதற்கு பிறகு, கலீஃபத்துல்லாஹ் ஹஸ்ரத் முனீர் அஹ்மது அஸீம்(அ) அவர்கள் தஷஹ்ஹீத், தஅவ்வுசு மற்றும் சூராஃபாத்திஹாவும் ஓதி இவ்வாறு கூறினார்.

2014 பிப்ரவரி 20 வியாழக்கிழமை நான் மௌரீஷியஸின் வடக்கு தீவை சார்ந்த மிகபெரிய கிராமங்களில் ஒன்றான இட்டயோலெட் என்ற இட்திற்கு சென்றிருந்தேன். அங்கு நான் பங்களாதேஸை சார்ந்த இரண்டு முல்லாக்களை சந்தித்தேன். எனக்கு சலாம் கூறி, என்னிடம் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டிருந்த அவர்கள் சுமார் 10 மணியளவில் மிக அன்பார்ந்த வார்த்தைகளால் அவர்களின் பள்ளிக்கு என்னை அழைத்தார்கள். அங்கு வைத்து நான் இந்தியாவின் பாங்களூரை சார்ந்த சில முஸ்லீம்களை சந்தித்தேன். அவர்களிடம் பேசிக்கொண்டிருந்த போது அதில் ஒருவர் எனது பெயர் என்னவென்று கேட்டார். நான் முனீர் அஹ்மது என்று சொல்லதுவங்கியதின் இடையில் அதில் ஒருவர் சொன்னார் அது எனது Burzuq-ன் பெயர் என்று. ஆனால் நான் எனது பெயரை முனீர் அஹ்மது அஸீம் என்று முழுமைப்படுத்தி கூறிய போது ஒரு நிமிடம் அவர்கள் அனைவரும் உருவங்களைப் போன்று ஆனார்கள். அடுத்த நிமிடம் மிக கோபத்துடனும், கடும்குணத்துடனும் என்னிடம் நடந்துக் கொண்டார்கள்.

சற்று முன்வரை அவர்களின் நாவுகளில் இருந்து வெளிவந்திருந்த இனிய வார்த்தைகளும் அவர்களின் அன்பார்ந்த பரிமாற்றங்களும், எங்கு போய் மறைந்தது என்று எனக்கு தெரியாது. அவர்களின் நிலை முற்றிலும் மாறிவிட்டது. பிறகு அவர் ஆணவத்துடனும், கோபத்துடனும் கேட்டார்கள். **''முஹய்த்தீன்'', ''கலீஃபத்துல்லாஹ்''** என்றெல்லாம் வாதம் செய்கின்ற நபரல்லவா நீங்கள்?. அவர்கள் எண்ணத்தில் அதிகமாக இருக்கின்ற உண்மையை உணர்ந்து கொண்டே, அவர்களை சற்றும் அஞ்சிகொள்ளாமல் நான் பதில் அளித்தேன் ஆம்!. நானே ஆவேன் அந்நபர். அதைத்தொடர்ந்து அல்லாஹ்விடமிருந்து எனக்கு வெளிப்பாடுகள் மூலமாக வழங்கிய பதவிகளைக் குறித்து சில கேள்விகள் அவர்கள் கேட்டார்கள். அவர்களுக்கு தெரிய வேணடியது நான் கலீஃபத்துல்லாஹ், முஹய்தீன் என்றெல்லாம் கூறிக்கொள்ள யார் சொன்னார் என்று. அக்கேள்விக்கு **''எனது நாதனும் என்னை படைத்தவனுமான அல்லாஹ் என்னை அறிவித்தான்''** என்று பதில் கொடுத்தேன். ஆனால் அவர்கள் எனது வார்த்தைக்கு முக்கியத்துவம் வழங்காமல் என்னை கள்வனென்றும், பொய்யனென்றும் கூறி ஆட்சேபித்தனர். மட்டுமின்றி அவர்கள் நம்பிக்கை கொண்டுள்ள இறுதி நபி என்ற விஷயத்தைப் பற்றி சத்தமாக வாதங்கள் செய்ய துவங்கினார்கள்.

அவர்கள் எழுப்பிய ஏராளமான கேள்விகளின் கூட்டத்தில் **“நான் உங்கள் மத்தியில் அல்லாஹ்வின் வேதத்தையும் எனது நடைமுறையையும எஞ்சவைத்திருக்கின்றேன். எவர் அதை இறுகப்பிடிப்பார் அவர் ஒருபொழுதும் நாசமடையமாட்டார்”** என்ற ஹதீஸையும் எடுத்துரைத்தார்கள்.

மஹ்தியை குறித்துள்ள ஹதீஸுகள் ஒன்றுக்கொன்று முரண்பாடுகள் உள்ளவைகள் என்றும். ஈசாநபியைப் பற்றிய ஹதீஸுகள் வெளிச்சம் ஏற்காதவைகள் என்றும் அவர்களில் சிலர் கூறினார்கள். அவர்களின் பார்வையில் திரு குர்ஆனில் இதைக் குறித்து தெளிவான வசனங்கள் இல்லாத நிலையில் இந்த ஹதீஸை அடிப்படையாக்கிக் கொண்டு மட்டும் ஒருவர் தோன்றுவார் என்று கூறிக்கொள்வதைவிட நல்லது இஸ்லாமின் மதத்துவத்தையும் அந்தஸ்தையும் திரும்பபெறச் செய்ய ஒரேயொரு வழி திரு குர்ஆனையும் திரு சுன்னத்தையும் இறுகப்பிடிப்பதற்கல்லவா?.

இந்த கேள்விக்கு நான் பதில் கொடுப்பதற்கு முன்னவே அவர்கள் என்னிடத்தில் கூறினார்கள். நீங்கள் ஒரு காதியானியல்லவா? நீங்கள் அந்த மிர்ஸாவின் தோழனல்லவா? நீங்களும் மிர்ஸாவை போன்றே ஒரு பொய்யனே ஆவீர்கள். இது கேட்டவுடனே நான் அவர்களிடம் சொன்னேன். ஆம் நான் ஹஸ்ரத் மிர்ஸாகுலாம் அஹ்மது(அ) மை உள்ளபூரணமாக ஏற்றுக்கொண்டிருககும் ஒரு அஹ்மதியே ஆவேன். அல்லாஹ்வின் அருளால் நீங்கள் எழுப்பிய அனைத்து கேள்விகளுக்கும் பதில் அளிப்பேன். அப்போது நமக்கு பார்க்கலாம் நம்முள் எவர் பொய்யனென்றும் கள்வனென்றும். ஹஸ்ரத் மிர்ஸா (அ)மும் நானுமோ. அல்லது திரு குர்ஆனையும் திருநபி போதனைகளையும் எட்டி மிதிக்கின்ற நீங்களோ பொய்யரென்று நீங்கள் சுயமாகவே அறிந்து கொள்வீர்கள். அதனால் இந்த குத்துஃபா மூலமாக அவர்களுக்கும், அவர்களைப் போன்றே முஸ்லீம்கள் என்று உரிமைகோருவோரும், தேவையில்லாத கேள்விகள் எழுப்பி சுயமாக பெரிய பண்டிதர்கள் என்று நடிக்கின்ற மற்று சில நபர்களுக்கும் நான் பதிலளிக்கின்றேன். குறிப்பாக ஜமா அத் அஹ்மதியா மக்களுக்கும் ஜமாஅத்துக்குள்ளில் இருந்து எப்படி கலீஃபத்துல்லாஹ் தோன்றினார் என்பதை குறித்தும் நான் பதில் தருகின்றேன். உண்மையில் அவர்களின் அனைத்து கேள்விகளுக்குமான பதில் திரு குர்ஆனிலே காணலாம்.

இஸ்லாமின்பால் நம்பிக்கையாளர்களை அனைத்தும் ஒன்றிணைத்து கொள்வதற்கும் அவர்களை நேர்வழியில் நிலைநாட்டுவதற்கும் திரு குர்ஆனையும் திருசுன்னத்தையும் இறுகப்பிடித்துக் கொள்ள வேண்டும் என்ற விஷயத்தில் எந்தவித ஐய்யவுமில்லை. அவர்களின் கேள்விகளின் முதல் பகுதியில் குறிப்பிட்டிருந்தும் நான் மேல் எடுத்துரைத்ததுமான விஷயத்திலும் எவ்வித கருத்து வேற்றுமையும் எனக்கில்லை. ஆனால் அதை ஒத்துகொள்வேமேயானாலும் அதுவழியாக மற்றொரு பெரிய கேள்வி நமக்கு முன்னால் எழும்புகின்றது. எவர் இந்த மகத்தான கடமையை ஆற்றுவார்? எவ்வாறு ஆற்றுவார்கள்?

இன்றைய நாள் வரையில் திரு குர்ஆன் எவ்வித மாற்றங்களும் ஏற்காமல் தூய்மையாக இருக்கின்றது. அப்படியிருக்கும் திருகுர்ஆன் நம்பிக்கையாளர்களிடம் இருந்த பின்னும் ஏன் முஸ்லீம் சமூகம் பலதரஅமைப்புகளாக பிரிந்துவிட்டார்கள்? இந்த பிரிவுகள் எப்படி உருவானது? முதல் கட்டத்தில் இவ்வாறு ஒன்று (பிரிவு) தோன்றிய போது அதற்கு ஒரு நோக்கம்

அல்லது திசை உணர்வு இருக்கவில்லையா? இல்லை என்றால் இந்நிகழ்ச்சியில் (பிரிவில்) மற்றேதேனும் ஈர்ப்பு தன்மை வாய்ந்த ஒன்றிருந்ததோ உங்களுக்கு அதை பின்பற்றிக்கொள்வதற்கு?

நீங்கள் எழுப்பியுள்ள கேள்வியின் இரண்டாம் பகுதியைப் பார்த்தால், நான் இப்போது எழுப்பிய கேள்விக்கு பதில் கிடைக்கும். முஸ்லீம் மக்கள் பல்வேறுப் பிரிவினர்களாக மாறுவதற்கு காரணம் அதில் மற்றவர்களுக்கு ஒரு மார்க்கவழியும் அதை பின் தொடர்ந்துக்கொள்ள ஒரு வழி முறையும் இருந்தது என்பதேயாகும். ஆரம்பகாலத்தில் இருந்து திரு குர்ஆன் சஹாபிகளில் மிக ஆதிக்கம் செலுத்தபட்டிருந்தது. அதை போன்றே சுன்னத் அவர்கள் நேரடியாக அறிந்திருந்ததால் அதன் ஆதிக்கவும் இருந்தது. பிறகு திருநபியின் காலத்திற்கு பின்னர் மக்கள் பல விஷயங்களிலும் வேறுபடவும், இந்த வேற்றுமை பிற்காலத்தில் கிலாஃபத் அமைப்பை நிலை தவற செய்த கட்டம் வரையிலும் நீடித்துக் கொள்ளவும் செய்தது. சுருக்கமாக கூறினால், இஸ்லாமிற்குள்ளேயே பலதரப்பட்ட அமைப்புகள் உருவாகியதும் மட்டுமல்லாமல், முஸ்லீம்கள் பிறகு வெவ்வேறு பிரிவினர்களாகவும் செய்தன. ஒவ்வொரு பிரிவினர்களும், அவர்களின் நோக்கத்துக்கு ஏற்றவார் திரு குர்ஆனுக்கு விளக்கமளிக்கவும் செய்து வந்தார்கள். ஒவ்வொரு குர்ஆன் போதனைகளையும் ஒவ்வொரு பிரிவினர்களும் ஒவ்வொரு தரத்தில் விளக்க செய்ததின் பலனாக ஒன்றுக்கொண்டு முரண்பாடுகளும் ஏற்பட்டது. ஒன்றுக்கொன்று முரண்பாடான கருத்துக்களை ஒவ்வொரு பிரிவினர்களும் பின்பற்றிக்கொள்ளவும் செய்தன. அதன் பெயரில் அவர்கள் ஒன்றுக்கொன்று ஆக்கிரமித்து கொள்ளும் நிலை வரையில் அவர்களை அது எட்ட செய்தது.

இங்காகும் திரு குர்ஆனையும் திரு சுன்னத்தையும் ஒன்றிணைத்து கொள்ளவதன் தேவை எழும்புவது. ஆனால் அது எப்படி? அது ஒரு கேள்வியாக உயர்கின்றது. இந்த கேள்விக்கு எவராவது ஒரு வழி திறக்கப்படாமல் இருந்தால் அது ஒரு சிக்கலாக எஞ்சும். காலகட்டவும் நமக்கு எதிராக இருக்கின்றது. திரு நபி(ஸ) வில் இருந்து நீங்கள் எவ்வளவு அகற்று கொள்கின்றீர்களோ அவ்வளவு நீங்கள் வேறுபட்டு போகவும் உங்களின் மத பண்டிதர்கள் தீயகுணமுடையவர்களாகவும் செய்வார்கள். அவர்களில் இருந்து இறையச்சம் விலகி கொள்ளவும் நம்மை ஒன்றுபடுத்துவதற்கு பதிலாக ஒன்றுக்கொன்று மோதிகொள்வதற்கான திட்டங்கள் தீட்டவும் செய்வார்கள். வரலாற்றினை புரட்டிப்பார்த்தால் இவ்விஷயம் புலனாகிவிடும்.

தற்காலம் நமக்கு மஹ்தியும் மஸீஹும் ஒன்றும் வரவில்லை என்றும், வரமாட்டார்கள் என்றும் எண்ணுவோம். அப்படியென்றால் நபி(ஸ) வின் உம்மத்து எப்படி நிலைநிற்கும் என்பதற்கு அவர்கள் அளிக்கும் பதில் **“உம்மத்து நிலைநிற்பதற்கான ஒரேயொரு வழி திரு குர்ஆனையும் திரு சுன்னத்தையும் இறுகப்பிடிக்க வேண்டும்”** என்று. அப்படியென்றால் ஏன் திருகுர் ஆனையும், திரு சுன்னத்தையும் அவர்கள் இறுகப்பிடிக்காமல் இருப்பது?. பதிலளிக்க முடியாத கட்டம் வரும்போது திருகுர்ஆனில் இருந்தும் திரு சுன்னத்தில் இருந்தும் எதற்காக அவர்கள் தடம்மாறி கொள்வது?. திரு குர்ஆனையும் திருசுன்னத்தையும் இறுகப்பிடிக்கின்றவர்கள் என்றால் ஏன் அவர்கள் பல்வேறு பிரிவினர்களாக மாறிவிட்டது?. சீரழிவு ஒரு தடவை நிகழ்ந்தால் பிறகு அதில் இருந்து விடுதலையில்லை. ஒவ்வொரு தலைமுறைகள் கடந்து செல்ல செல்ல அதில் சீரழிவு

அதிகரித்து விடவும், நல்லொழுக்கம் குறைந்துவிடவும் செய்யும். மட்டுமின்றி அவர்களில் இறையச்சம் விலகிகொள்வதும் இஸ்லாமிக வாழ்க்கைக்கு ஏற்ற நம்பிக்கை இழந்துக் கொள்ளவும் செய்யும். இனி எவரும் வரவேண்டிய தேவையில்லை என்று நம்பிக்கொள்கின்றோர்கள் ஒரு விஷயத்தைப் புரிந்துக்கொள்ள வேண்டும். அப்படியென்றால் இஸ்லாம் வெற்றியடைவதற்கு பதிலாக அது தோல்வியை எட்டும். அவர்கள் கனவின் உலகத்திற்குள்ளே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். உண்மையுமாக இதற்கு எவ்வித தொடர்பும் இல்லை. சமுதாயத்தை வழிநடத்திக் கொள்ள ஆள் இல்லாமல் சமுதாயத்திற்கு வெற்றியை நோக்கி பயணம் புரிய இயலாது. திரு குர்ஆன் கூறுகின்ற மதவரலாற்றின் நிகழ்வுகளின் பால் ஒன்று திரும்பிக்கொள்வோம்.

திரு குர்ஆனின் போதனைகளின்படி உண்மை தோன்றுகின்ற வேளைகளிலெல்லாம் மக்கள் அதை ஏற்றுக்கொள்ளவும் மறுத்துக்கொள்ளவும் செய்வார்கள். இறுதியில் உண்மை புலனாகிவிடவும், வெற்றியடைந்து விடவும் செய்கின்றன. ஆனால் அதற்கு பிறகும் மக்கள் வழிதவறி விடுவார்கள். அம்மக்கள் ஒரு சீரழிந்த சமுதாயமாக மாறிவிடுவார்கள்.

திரு குர்ஆன் தெரியப்படுத்துகின்ற வரலாற்றின் அடிப்படையில் பார்த்தால் சீரழிக்கின்ற மக்களை இரட்சிப்பதற்கு அல்லாஹ் ஒரு தூதனை தோற்றுவிப்பான் அல்லது நிலைகொண்ட மதத்தை மாற்றி, அதற்கு பதிலாக அல்லாஹ் ஒரு புதிய நபியையும் ஒரு புதிய மதத்தையும் உருவாக்குவான். மதவரலாற்றில் நாம் எங்கு படித்துப்பார்த்தாலும் ஒரு மதம் சீர்குலைந்து போனதற்கு பிறகு அம்மக்கள் அதர்மிகளாக மாறியதற்கு பின்னர், மதபண்டிதர்கள் பல்வேறு பிரிவினர்களாகிவிட்டதற்கு பிறகு, ஒரு சுப்பிரபாதத்தில் பலதர பிரிவினர்களாக இருந்த இந்த பண்டிதர்கள் அனைவரும் ஒன்றாகி விட்டதாகவோ, பல்வேறு பிரிவினர்களாயிருந்த மக்கள் எல்லாம் ஒன்றாக சேர்ந்து விட்டதாகவோ அவர்களின் எல்லா தவறாகிய விஷயங்களுக்கும் பாவமன்னிப்பு கூறி ஒன்றிணைந்ததாகவோ பிறகு அவர்கள் ஒன்றுக்கு ஒன்று கைகொடுத்தும் கட்டிப்பிடித்தும் நமக்கு எல்லா கருத்து வேற்றுமையையும் மறந்து ஒன்றாக சேர்ந்திடுவோம் என்று கூறியதாகவே வரலாற்றில் எங்கும் காணமுடியாது. ஒவ்வொரு பிரிவினர்களின் கருத்து வேற்றுமையை எப்படி மறக்க முடியும்? அவர்கள் ஒவ்வொருவரும் எண்ணுவது அவர்கள் திருகுர்ஆனுடையவோ அல்லது அவர்கள் இறுகப் பிடித்திருப்பது ஏதோ அதுவழியாக அவர்கள் உண்மையைப் பின்பற்றிக் கொள்கின்றார்கள் என்று. ஆனால் பல்வேறு பிரிவினர்களை சார்ந்த மக்கள் உண்மையை பகுத்தறிந்துகொள்ள வேண்டுமென்றால் அவர்கள் ஒன்றுக்கொன்று பேச்சு வார்த்தைகளில் ஈடுபட வேண்டும். ஒவ்வொருவரும் அவர்களின் கருத்துக்களை வெளிப்படுத்திக் கொள்ள வேண்டும். அப்படி கருத்து ஒற்றுமையின் பால் எட்ட முடியும். மதசமூகம் ஒன்றுக்கொன்று சேரமுடியாத நிலையை இன்று எட்டியிருக்கின்றது. இது அனுமதிக்கயியலாத விஷயமாகும். மக்கள் சகிப்புத் தன்மை இழந்தவர்களாக மாறிவிட்டார்கள். மற்றுள்ளவர்களின் கருத்தை கேட்பதற்கு கூட அவர் தயாராகாத அவலநிலை. இது படிப்பறிவு பெற்றமக்களிலல்லாமல் அனைத்து மக்களிலும் காணலாம். ஒரு மதத்தின் மக்கள் அசுத்தராக மாறிவிட்டால் அவர்களை மீண்டும் ஒன்று சேர்த்து அவர்களின் குற்ற குறவுகளை திருத்திக்கொள்ளவும் செய்திருந்தார்கள். அவர்களின் பீர்மார்கள் அல்லது பக்கீர்மார்கள் அல்லது உலமாக்கள் அல்லது சூபிகள் இக்கடமையை நிறைவேற்றி வந்தன.

இப்போது அவ்வாறு மக்களை சீர்திருத்திக்கொள்ள ஏன் முடியவில்லை? திரு குர்ஆனின் போதனைகளின்படி மததலைவர்கள் அசுத்தராக பரிணமித்திருக்கின்றார்கள். அதனால் பொதுமக்கள் அவர்களுக்கு விருப்பமுள்ளவர்களிடத்தில் அவர்களும் சேர்ந்தார்கள். அப்படி அவர்களும் அசுத்தராக மாறிவிட்டார்கள். மத தலைவர்கள் ஆன்மீகமாக அசுத்தராக மாறிவிட்டால், இறையச்சம் அவர்களில் இருந்து விலகிவிட்டால், அவர்களை பின்பற்றிக்கொள்கின்ற பொதுமக்களும் அதைப் போன்றே மாறிவிடுகின்றார்கள். மக்களை நாசத்திற்கு ஆளாக்கி கொள்வது மதத்தலைவர்களே ஆவார்கள். சுருக்கமாக சொன்னால் அரசியல் தலைவர்களை போன்றே மததலைவர்களும் மாறிவிட்டார்கள். அடிப்படையாக மிக முக்கியத்துவம் வாய்ந்த விஷயம் தலைமையகம் சரியாக இருந்துக்கொள்ள வேண்டும் என்பதாகும். மதபரமான தலையகம் தூய்மையாக இருந்தால் மக்கள் வேறுபட்டுக்கொள்ளமாட்டார்கள், சீரழிந்துவிடமாட்டார்கள். சில தவறுகள் காரணமாகவே வேறுபடல் உருவாகுவது. அது இறுதியில் சிந்தனைபரமான தரம் தாழ்வுக்கும், வேற்றுமைக்கும் அவர்களை ஆளாக்கிக் கொள்ளும். மனதின் தீய நோக்கவும், அசுத்தவும் மூலமாகவே இது நிகழுவது. அவர்களில் நாம் பார்க்கின்ற வேற்றுமைக்கு காரணம் இதுவேயாகும். மஹ்தி இலை என்று எண்ணுங்கள். மஹ்தியும் வரமாட்டார். மஸீஹும் தோன்றமாட்டார் என்று எண்ணுங்கள். அவர்களின் தேவையில்லையென்றும், நுபூவத்தும் முடிந்துவிட்டது என்றும் எண்ணுங்கள். ஆனால் விஷயம் அவ்வாறேயில்லை. பண்டிதர்கள் வேறுபடவும் அவர்கள் ஒன்றுக்கொன்று மோதிக்கொள்ளவும் ஆட்சேபித்து கொள்ளவும் இஸ்லாமை காட்டிக்கொடுத்தவர்கள் என்றும் ஒன்றுக்கொன்று ஆரோபணம் செய்யவும் செய்கின்றார்கள். இஸ்லாமின் விரோதிகள் ஆட்சேபித்துக் கொள்வதை விட பெரிய அளவிற்கு இஸ்லாமை நேசிக்கின்றவர்களாகிய இவர்கள் பரிகசித்துக்கொள்கின்றார்கள். இவர்களைக் குறித்து மற்று சிலர் கூறிக்கொள்வது, இவர்கள் மிக பெரிய இஸ்லாமிக பண்டிதர்கள் என்றும் இஸ்லாமிற்காக இவர்கள் மகத்தான சேவைகள் செய்கின்றார்கள் என்றெல்லாம்.

இவர்களின் செயல்கள் இப்படியென்றால், இஸ்லாம் முன்னுக்கு வரும் என்று எப்படி உங்களுக்கு கூறுவதற்கு முடியும்? எப்படி அது சாத்தியமாகும்? நிச்சயமாக சில. எதிர்பார்த்தல் எங்காவது இருக்க வேண்டும். திருகுர்ஆனுடையவும், திருசுன்னத்தினுடையவும் அடிப்படையில் இந்த இஸ்லாமிக உம்மத்தை நவீகரிப்பதற்கான என்ன வழி இருக்கின்றது? பதில் கூறுங்கள்.

இன்று நான் இந்த சொற்பொழிவை நிறைவுப்படுத்துகின்றேன். இன்ஷா அல்லாஹ். இதே விஷயத்தைக் குறித்து வருகின்ற வெள்ளிக்கிழமையும் சொற்பொழிவு ஆற்றுவேன். இப்போதைய இஸ்லாமின் அவல நிலைகளை குறித்து சிந்திப்பதற்கு முஸ்லீம்களுக்கு அல்லாஹ் தௌபீக் வழங்குவானாக. திருகுர்ஆனும், திருசுன்னத்தும் கற்பிக்கின்ற பாதை வழியாக பயணம் மேற்கொள்ள அல்லாஹ் அருள் புரிவானாக. ஆமீன்.

Issued by R. Jamaludin Raother Amir (South Zone)
Jamaat Ul SahihAl Islam, Kerala (Regd) India.
Email: jamal.raother@gmail.com
Web:www.jamaat-ul-sahih-al-islam.com
Phone: 09447001832

Translated by
**Azim Ahmad**
*Sadr Sahibul Faraj*
Kerala/ Tamil Nadu
E-mail: sahihazisulsat@gmail.com
Cell: 09789180817